ஞாயிறுதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

தினமணி
ஞாயிற்றுக்கிழமை, 15 பிப்ரவரி 2026

ஞாயிறுதோறும்
தினமணியுடன்...
கொண்டாட்டம்

இரட்டை என்ஜின் ஆட்சியால் புதுச்சேரியில் வளர்ச்சி

மத்திய அமைச்சர் அமித் ஷா

காரைக்காலில் நடைபெற்ற பாஜக பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர்.

காரைக்கால், பிப். 14: புதுச்சேரியில் இரட்டை என்ஜின் ஆட்சியால் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றார் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.

காரைக்காலில் சனிக்கிழமை நடைபெற்ற பாஜக பொதுக்கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசியது: பிரதமர் நரேந்திர மோடி, புதுவை முதல்வர் என். ரங்கசாமியின் இரட்டை என்ஜின் அரசின் செயல்பாடுகள் குறித்தும், இண்டி கூட்டணியின் தீய நோக்கம் குறித்தும் விவரிக்கவே இங்கு வந்துள்ளேன். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு புதுவை மக்கள், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு அளித்தனர். இதன்மூலம் ஊழல் ஒழிக்கப்பட்டுள்ளது. முன்பு தில்லிக்கு அடிமையாக காங்கிரஸ் அரசு இருந்தது. இப்போது, புதுவை ஆட்சியாளர்கள் சுயமாக முடிவெடுத்துக்கொள்ளும் நிலை உள்ளது. அரசியல் நிலைத்தன்மையை உருவாக்கியுள்ளோம்.

புதுச்சேரி மக்கள் பாஜக, என்.ஆர்.காங்கிரஸ் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் 44 சதவீத வாக்குகள் அளித்து ஆதரவு அளித்தார்கள். இந்த முறை பாஜக, என்.ஆர்.காங்கிரஸ், அதிமுக கட்சிகள் இணைந்து புதுவையில் 60 சதவீத வாக்குகள் பெற்று 24 தொகுதிகளைப் பெறவேண்டும்.

புதுச்சேரியில் கடந்த 5 ஆண்டுகளில் சட்டம்- ஒழுங்கு சீர்படுத்தப்பட்டுள்ளது. வளர்ச்சி கொண்டுவரப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் புதுச்சேரியை மேலும் வளர்ச்சி அடைந்த மாநிலமாக மாற்ற வேண்டும். அதற்காக, புதுச்சேரி மீனவர்களின் பொருள்களை உலகச் சந்தைகளில் கொண்டு சேர்க்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். தகவல் தொழில்நுட்பம், தரவுகள் மையம், ஏஐ உள்ளிட்ட துறைகளில் புதுச்சேரி மாநில இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பாஜக ஏற்படுத்திக் கொடுக்கும்.

மலேசியாவில் தமிழுக்குப் பெருமை: பிரதமர் மோடி அண்மையில் மலேசியா சென்றபோது அங்குள்ள பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் மையம் ஒன்றை ஏற்படுத்துவதாகவும், மலேசியவாழ் தமிழ் மாணவர்களுக்கு திருவள்ளுவர் பெயரில் ஊக்கத்தொகை அளிப்பதாகவும் உறுதியளித்துள்ளார். மலேசிய நாட்டில் தமிழ் மொழிக்கு சிறுபான்மை மொழி என்ற அந்தஸ்து கிடைத்துள்ளது.

புதுவையில் முந்தைய நாராயணசாமி அரசு, தில்லி காங்கிரஸ் தலைமையின் கஜானாவை நிரப்பும் வேலையை மட்டும் செய்தது. சென்டாக் மூலம் உயர் கல்வி சேர்க்கையில் எஸ்சி, எஸ்டி இட ஒதுக்கீட்டை ஏலத்தில் விட்டார்கள். சென்டாக்கில் ரூ.15,000 கோடி முறைகேடு நடந்துள்ளதாகத் தணிக்கைத் துறை அறிக்கையில் தெரியவந்துள்ளது. இந்தத் தொகை புதுவையின் 3 ஆண்டு கால பட்ஜெட் நிதியாகும்.

நாராயணசாமி ஆட்சியில் புதுவையில் ஒரு தொழில்கூட தொடங்கப்படவில்லை. எங்கள் அரசு நலிவடைந்த கூட்டுறவு நிறுவனங்களை புத்துணர்ச்சி பெறச் செய்துள்ளது. புதுவையில் மென்பொருள் நிறுவன மையம் தொடங்க தற்போது ஜோஹோ நிறுவனம் திறக்கப்பட்டுள்ளது. புதுவையில் திறக்கப்பட்ட மடிக்கணினி தயாரிப்பு நிறுவனம் மூலம் உலகின் 70 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும்.

வர்த்தக ஒப்பந்தத்தால் பலன்: எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பொய்பேசுவதையே தொழிலாக வைத்துள்ளார். ஐரோப்பிய யூனியன், பிரிட்டன், அமெரிக்காவுடன் இந்தியா செய்துகொண்ட வர்த்தக ஒப்பந்தம் காரணமாக மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு நன்மையே கிடைக்கும். தீங்கு எதுவும் இருக்காது.

புதுச்சேரி மேலும் வளர்ச்சி பெறுவதற்கான அறிவிப்புகள் மற்றும் திறப்பு நிகழ்வுகளை பிரதமர் விரைவில் நடத்தவுள்ளார். எனவே, பிரதமர் மோடி மற்றும் முதல்வர் ரங்கசாமிக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றார்.

பாஜக மாநிலத் தலைவர் வி.பி. ராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, புதுவை உள்துறை அமைச்சர் ஆ. நமச்சிவாயம், சட்டப்பேரவைத் தலைவர் ஆர். செல்வம், அமைச்சர் ஜான்குமார், புதுவை பாஜக பொறுப்பாளர் நிர்மல்குமார் சுரானா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நெடுங்காடு தொகுதி பொறுப்பாளர் எம். செல்வராஜ் வரவேற்றார். மாவட்ட பாஜக தலைவர் ஜி.கே.கே. முருகதாஸ் நன்றி கூறினார்.

புதுச்சேரியில் 9.44 லட்சம் வாக்காளர்கள்

இறுதிப் பட்டியல் வெளியீடு

புதுச்சேரி, பிப்.14: வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்குப் பிறகு, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வாக்காளர் இறுதிப் பட்டியல் சனிக்கிழமை வெளியிடப்பட்டது. இதில் மொத்தம் 9.44 லட்சம் வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் ஆண்களை விட பெண் வாக்காளர்கள் 56,882 பேர் அதிகம்.

இது குறித்து புதுச்சேரி யூனியன் பிரதேச தலைமைத் தேர்தல் அதிகாரி பி.ஜவஹர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்குப் பிறகு 16.12.2025-இல் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. 27.10.25-இல் வாக்காளர் பட்டியலில் 10.21 லட்சம் பேர் இருந்தனர். வரைவு வாக்காளர் பட்டியலில் 1,03,467 பேர் தகுதியில்லாதவர்களாக நீக்கப்பட்டனர்.

ஆட்சேபணைகள், வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் தொடர்பான பணிகள் 16.12.25 முதல் 19.1.26 வரை நடைபெற்றது.

இதில் 42,719 தகுதியுடைய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். தகுதியில்லாத 16,619 பேர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டனர். சனிக்கிழமை வாக்காளர் இறுதி பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் 9,44,211 பேர் இடம் பெற்றுள்ளனர். புதுச்சேரி பிராந்தியத்தில் ஆண்கள் 3,38,906, பெண்கள் 3,82,269, மூன்றாம் பாலினத்தவர் 121 பேர் இடம் பெற்றுள்ளனர்.

காரைக்கால் பிராந்தியத்தில் ஆண்கள் 72,640, பெண்கள் 82,857, மூன்றாம் பாலினத்தவர் 18 பேரும், மாஹே பிராந்தியத்தில் ஆண்கள் 13,730, பெண்கள் 16,006, ஏனாம் பிராந்தியத்தில் ஆண்கள் 18,319, பெண்கள் 19345 பேரும் இடம் பெற்றுள்ளனர். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மொத்தம் ஆண்கள் 4,43,595, பெண்கள் 5,00,477, மூன்றாம் பாலினத்தவர்கள் 139 பேர் வாக்காளர் இறுதிப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

பத்தாம் வகுப்பு தேர்வு

தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப் பட்டியல் வெளியீடு

சென்னை, பிப். 14: பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மார்ச் மாதம் தொடங்கவுள்ள நிலையில், தேர்வெழுதவுள்ள மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேர்வுத் துறை இயக்குநர் க.சசிகலா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை: பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மார்ச் 11 முதல் ஏப்ரல் 6-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. தேர்வெழுதவுள்ள மாணவர்களின் விவரம் மாவட்ட வாரியாக கேட்டுப்பெறப்பட்டது.

அதன் அடிப்படையில் தற்போது தேர்வெண்ணுடன் கூடிய மாணவர்களின் பெயர்ப் பட்டியல் dgeapp.tnschools.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதை அனைத்துப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் பிப்ரவரி 18-ஆம் தேதிக்குள் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். இந்தத் தகவலை பள்ளிகளுக்கு தெரிவித்து, தொடர் நடவடிக்கையை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் நாளை புயல் சின்னம் உருவாக வாய்ப்பு

சென்னை, பிப். 14: தென்கிழக்கு வங்கக் கடலில் திங்கள்கிழமை (பிப்.16) காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்குப் பகுதி மற்றும் அதையொட்டிய தென்கிழக்கு வங்கக் கடலில் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, தெற்கு வங்கக் கடல் மற்றும் அதையொட்டிய இந்தியப் பெருங்கடலில் திங்கள்கிழமை (பிப்.14) காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளது.

இதனால், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ஞாயிற்றுக்கிழமை (பிப்.15) முதல் பிப்.18 வரை வறண்ட வானிலையே நிலவும். தொடர்ந்து, பிப்.19, 20 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது.

பனிப்பொழிவு: இதற்கிடையே, பிப்.15-இல் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும், பிப்.16-இல் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலும் மிதமான பனிப்பொழிவு இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருகால பூஜை திட்டத்தில் 1,000 கோயில்களை இணைக்க ரூ.25 கோடி

முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, பிப். 14: தமிழக அரசின் ஒருகால பூஜை திட்டத்தின் கீழ், கூடுதலாக 1,000 திருக்கோயில்களை இணைக்க ரூ.25 கோடிக்கான காசோலைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை வழங்கினார்.

தமிழகத்தில் நிகழ் நிதியாண்டில் (2025-26) தமிழக அரசின் ஒருகால பூஜை திட்டத்தின் கீழ், நிதி வசதியற்ற 1,000 திருக்கோயில்கள் கூடுதலாக இணைக்கப்படும் என அரசு சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனடிப்படையில், கூடுதலாக இணைக்கப்பட்ட கோயில்களுக்கான செலவின நிதியாக ரூ.25 கோடிக்கான காசோலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் சனிக்கிழமை வழங்கினார். இந்த காசோலை மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்புநிதியாக முதலீடு செய்யும் வகையில் அதன் மேலாண்மை இயக்குநரிடம் வழங்கப்பட்டது. இதன்மூலம், ஒருகால பூஜை திட்டத்தில் பயன்பெறும் திருக்கோயில்களின் எண்ணிக்கை 19,000-ஆக உயர்ந்துள்ளது.

உயர்த்தப்பட்ட ஊக்கத் தொகை: ஒருகால பூஜை திட்ட அர்ச்சகர்களுக்கு உயர்த்தப்பட்ட மாதாந்திர ஊக்கத்தொகை ரூ.1,500 வழங்கிடும் அடையாளமாக 10 அர்ச்சகர்களுக்கு அதற்கான காசோலைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

மேலும், மொத்தம் ரூ.8.58 கோடியில் கொள்முதல் செய்யப்பட்ட பூஜை உபகரணங்களை ஒருகால பூஜை திட்டத்திருக்கோயில்களுக்கு வழங்கும் திட்டத்தை அவர் தொடங்கிவைத்தார். இதில், ஒவ்வொரு கோயிலுக்கும் தலா ரூ.4,515 செலவில் பித்தளை தாம்பாளம், தட்டு (3 கிண்ணங்களுடன்), செம்பு, தூபக்கால், மணி, காமாட்சி விளக்கு மற்றும் பஞ்சபாத்திரம் ஆகிய பூஜை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் மட்டும், ஒருகால பூஜை திட்ட திருக்கோயில்களின் மின் கட்டணத்தை துறையே செலுத்தும் வகையில் ரூ.6 கோடி நிதி ஒதுக்கப்பட்டு திருக்கோயில்களின் மின் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத் திருக்கோயில்களின் அர்ச்சகர்களின் குழந்தைகள் உயர் கல்வி பயில கல்வி உதவித்தொகையாக தலா ரூ.10,000 வீதம், 500 மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக ஒருகால பூஜை திட்டத்துக்கு மட்டும் தமிழக அரசு சார்பில் ரூ.335 கோடி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலர் நா.முருகானந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கன்னியாகுமரியில் சிவாலய ஓட்டம் தொடக்கம்

சிவாலய ஓட்டத்தில் ஈடுபட்டுள்ள பக்தர்கள்.

குலசேகரம், பிப். 14: மகா சிவராத்திரியை முன்னிட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் புராதன சிறப்புமிக்க சிவாலய ஓட்டம் சனிக்கிழமை தொடங்கியது.

இதற்காக பக்தர்கள் முன்சிறை அருகேயுள்ள திருமலை சூலபாணி மகாதேவர் கோயிலில் இருந்து தொடங்கி, திக்குறிச்சி மகாதேவர், திற்பரப்பு வீரபத்திரர், திருநந்திக்கரை நந்தீஸ்வரர், பொன்மனை தீம்பிலான் குடி மகாதேவர், திருப்பன்னிப்பாகம் கிராதமூர்த்தி, கல்குளம் நீலகண்ட சுவாமி, மேலாங்கோடு காலகாலர், திருவிடைக்கோடு சடையப்பர், திருவிதாங்கோடு பக்தவல்சன், திருப்பன்றிகோடு பருதிபாணி மகாதேவர், திருநட்டாலம் சங்கரநாராயணர் ஆகிய 12 சிவாலயங்களுக்கு ஓட்டமாகச் சென்று சுவாமி தரிசனம் செய்கின்றனர்.

இதில் கன்னியாகுமரி, கேரளத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கின்றனர்.

இந்நிலையில், நடந்து செல்லும் ஆண் மற்றும் பெண் பக்தர்கள் காவியுடை அணிந்து, கையில் விசிறிகளுடன் சனிக்கிழமை காலையில் முன்சிறை மகாதேவர் கோயிலுக்கு வரத்தொடங்கினர். இங்கு சுவாமியை தரிசித்துவிட்டு கோபாலா! கோவிந்தா! என கோஷமிட்டவாறு ஓட்டத்தில் ஈடுபட்டனர். வாகனங்களில் சிவாலய ஓட்டத்தில் ஈடுபடும் பக்தர்கள் ஞாயிற்றுக்கிழமை ஓட்டத்தைத் தொடங்குகின்றனர். இவர்கள் திங்கள்கிழமை அதிகாலை ஓட்டத்தை நிறைவு செய்கின்றனர்.

ஹிஜாப் தடைக்கு எதிராகப் போராடிய தமுமுகவினர் மீதான வழக்கு ரத்து

மதுரை, பிப். 14: கல்வி நிறுவனங்களில் இஸ்லாமிய மாணவிகள் ஹிஜாப் அணியக் கூடாது என்ற உத்தரவுக்கு எதிராகப் போராடிய தமுமுகவினர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

கல்வி நிறுவனங்களில் இஸ்லாமிய மாணவிகள் ஹிஜாப் அணியக் கூடாது என கர்நாடக மாநில அரசு கடந்த 2022-இல் உத்தரவிட்டது. இதைக் கண்டித்து, தமுமுக சார்பில் சிவகங்கை மாவட்டத்தின் திருப்பத்தூரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதுதொடர்பாக தமுமுகவின் சிவகங்கை மாவட்ட நிர்வாகிகள் கமருல் ஜமான், பாரூக் ஆலிம், மைதீன், யாசின் உள்பட 6 பேர் மீது திருப்பத்தூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி, தமுமுகவின் சிவகங்கை மாவட்டத் தலைவர் கமருல் ஜமான் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தார். தங்கள் போராட்டம் ஜனநாயக முறைப்படி அமைதியாக நடைபெற்ற நிலையில், கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனவும் அவர் கோரினார்.

இந்த வழக்கு உயர்நீதிமன்ற நீதிபதி விக்டோரியா கௌரி முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் ஜனநாயக வழியில் தங்கள் எதிர்ப்புகளை குடிமக்கள் தெரிவிக்கலாம் என உயர்நீதிமன்ற உத்தரவுகள் உள்ளன. எனவே, இந்த வழக்கை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் தெரிவித்தார். இதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டார்.

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911

மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

SARFAESI சட்டம் 2002, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார். இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : ஈரோடு கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர்கள் : M/s.ஸ்ரீ அஸ்வதா ஃபேஷன், உரிமையாளர் திருமதி.S.K.மேகலா, க/பெ.திரு.கந்தவேல், கதவு எண்.19, C.S.நகர், பெரியசேமூர் அஞ்சல், ஈரோடு - 638004. M/s.ஸ்ரீ அஸ்வதா ஃபேஷன், உரிமையாளர் திருமதி.S.K.மேகலா, க/பெ.திரு.கந்தவேல், கதவு எண்.787, மாணிக்கம்பாளையம், குறிச்சி, ஈரோடு - 638314. **உத்திரவாதம் அளித்தவர் :** திரு.P.கார்த்திக் குமார், த/பெ.(லேட்) பொன்னுசாமி, 1/9A, 2-1A/NA, கரியம்பாளையம் புதூர், கரியம்பாளையம், அன்னூர் தாலுக்கா, கோவை வடக்கு - 641653. **கடன் நிலுவைத் தொகை : 10.02.2026 வரையில் ரூ.2,27,65,301.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 06.07.2022. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 16.09.2025. சொத்து விபரம் :** கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் தாலுக்கா, அன்னூர் சார் பதிவாளர் அலுவலகம், கரியம்பாளையம் கிராமம், தமிழ்நாடு 641653, சர்வே எண்.258/1, உட்பிரிவு சர்வே எண்.258/1B1B-ல் அமைந்துள்ள 0.35 ஏக்கர் பரப்பளவு கொண்ட காலியிட சொத்தானது பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது : வடக்கில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 0.12 ஏக்கர் வழித்தட நிலம், கிழக்கில் R.S.No.264-ல் உள்ள நிலம், தெற்கில் R.S.No.258/181-ல் உள்ள நிலம், மேற்கில் கலாமணி என்பவருக்குச் சொந்தமான 0.53 ஏக்கர் நிலம். **அடமானம் வைக்கப்பட்டுள்ள இச்சொத்தானது திரு.P.கார்த்திக் குமார், த/பெ.(லேட்)பொன்னுசாமி அவர்களின் பெயரில் உள்ளது. காப்பு விலை : ரூ.1,66,25,000.00. முன்வைப்புத் தொகை : ரூ.16,62,500/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 18.03.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன்** . சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 09.03.2026 முதல் 16.03.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 17.03.2026 மாலை 4.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஈரோடு கிளை : Mobile No : 8489903006, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mobile No: 8489903057**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 5 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். 2. ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் 17.03.2026, மாலை 4.00 மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். 3.மின்னணு ஏல விற்பனையானது "எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் நடைபெறும். 4. விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக https://baanknet.com என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 5. வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். 6. மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஈரோடு கிளை : Mobile No : 8489903006, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903057, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.bank.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 10.02.2026
இடம் : ஈரோடு

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

DINAMANI, Coimbatore Phone: 2317853; Fax: 0422-2311320 RNI Reg. No. 53675/91. Printed and Published by N. Gopalan on behalf of Express Publications (Madurai) Private Ltd., at Express Press, Old No.152 / New No.110, Pankaja Mill Road, Coimbatore - 641 045. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan Coimbatore. Vol. 37, No. 45
COPYRIGHT: Express Publications (Madurai) Private Ltd., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.